<u>சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்</u>

பாகம் 1
பிரிவு அ: மொழியணிகள்
[கேள்வி 1 - 10]
(10 புள்ளிகள்)
பரிந்துரைக்கப்பட்ட நேரம்: 15 நிமிடங்கள்

1. கொடுக்கப்பற்றவற்றுள் எஃது **ஆத்திசூடி**?

A) அச்சம் தவிர்
B) ஈவது விலக்கேல்
C) ஈகை திறன்
D) ஓய்தல் ஒழி

2. 

படம் 1



படம் 2

மேற்கண்ட படங்களுக்கேற்ற **புதிய ஆத்திசூடியைத்** தேர்ந்தெடுக.

| | படம் 1 | படம் 2 |
|---|---|---|
| A | ஊண்மிக விரும்பு | உடலினை உறுதிசெய் |
| B | உடலினை உறுதிசெய் | ஊண்மிக விரும்பு |
| C | ஐம்பொறி ஆட்சி கொள் | ஊண்மிக விரும்பு |
| D | உடலினை உறுதிசெய் | ஐய மிட்டுண் |

LIVEWORKSHEETS

3. படத்திற்குப் பொருத்தமான ***இணைமொழியைத்*** தெரிவு செய்க.



A) ஆடை அணிகலன் C) சுற்றும் முற்றும்

B) ஆடல் பாடல் D) எலும்பும் தோலும்

4. கோடிட்ட இடத்திற்குப் பொருத்தமான ***இரட்டைக்கிளவியைத்*** தேர்வு செய்க.

| |
|---|
| ஆசிரியர் கோபத்தால் பற்களை ______ என கடித்தார். |

A) நறநற C) மளமள

B) திருதிரு D) கலகல


5. கீழ்க்கண்ட உரையாடலுக்கு ஏற்ற ***கொன்றை வேந்தனைக்*** கண்டறிக.

ஆசிரியர்: மகாபாரதப் போர் எப்படித் தோன்றியது?
பாவணன்: தருமன் சூதாட்டம் ஆடியதால், ஐயா.
ஆசிரியர்: கம்பராமாயணத்தில் கைகேயி என்ன செய்தாள்?
பாவணன்: வாதம் செய்து இராமணைப் பதினான்கு ஆண்கள் காட்டுக்குச் செல்ல வைத்தாள்.

A) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
B) ஏவா மக்கள் மூவா மருந்து.
C) சூதும் வாதும் வேதனை செய்யும்.
D) திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.

LIVEWORKSHEETS

6. கீழ்க்கண்ட படத்திற்குப் ***பொருந்தாத உவமைத் தொடரைத்*** தேர்ந்தெடுக.



A) எலியும் பூனையும் போல
B) மலரும் மணமும் போல
C) நகமும் சதையும் போல

7. கொடுக்கப்பட்ட ***உலகநீதிக்கு*** ஏற்ற பொருள் எது?

| போகாத விடந்தனிலே போக வேண்டாம் |
| --- |

A) செல்லத்தகுந்த இடங்களுக்குச் செல்லக் கூடாது.
B) செல்லத்தகாத இடங்களுக்குச் செல்ல வேண்டும்.
C) செல்லத்தகாத இடங்களுக்குச் செல்லக் கூடாது.

8. கீழ்க்காணும் ***குறளில்*** கோடிடப்பட்டுள்ள சீரின் பொருள் என்ன?

| வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு<br>யாண்டும் <u>இடும்பை</u> இல. |
| --- |

A) மகிழ்ச்சி
B) சோதனை
C) தோல்வி
D) துன்பம்

9. கீழ்க்காணும் பொருளுக்கு ஏற்ற ***மரபுத்தொடரைத்*** தெரிவு செய்க.

| ஒன்றை மிகைப்படுத்திக் கூறுதல் |
| --- |

A) ஓட்டை வாய்
B) அள்ளி விடுதல்
C) அள்ளி இறைத்தல்
D) நாக்கு நீளுதல்

LIVEWORKSHEETS

10. கீழ்க்காணும் பொருளுக்கு ஏற்ற ***பழமொழியைத்*** தெரிவு செய்க.

| |
|---|
| ஒரு குழந்தை சிறு வயதிலே எப்படிச் செயல்படுகிறதோ அதைக் கொண்டு பிற்காலத்தில் எப்படி விளங்கும் என்பதை ஊகித்து அறியலாம். |

A) இளங்கன்று பயம் அறியாது.
B) ஊருடன் கூடி வாழ்.
C) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
D) விளையும் பயிர் முளையிலே தெரியும்.



LIVEWORKSHEETS